22.06.2026 O.S. 571/2021 பி.வா.சா.1 வீரபாண்டியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

நோட்டீஸ் கொடுத்த பிறகு தான் நான் ஆவணத்தை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளேன் என்றால் சரிதான். நான் ஆஜர்படுத்திய ஆவணம் பி.வா.சா.ஆ 30 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ 30 முதல் தளம் கட்டுவதற்காக அனுமதி கொடுக்கப்பட்டதற்கு என்றால் சரிதான். தரைதளம் கட்டியதற்கான அனுமதிக்கான ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வீடாக தான் கிரையம் பெற்றுள்ளேன். நான் என்னுடைய கிரைய ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகமில்லை. எனது கிரைய ஆவணம் தான் வாதி தரப்பில் வா.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ல் எனக்கும், எனது மனைவிக்கும் சேர்த்து தான் கிரையம் பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ 2 ஆவணத்தில் உள்ள சர்வே எண், நான்குமால் சரியானது என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. எது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ 2 ஆவணத்தில் கண்ட சொத்து விற்பனையாளர் சொத்துகிடையாது. அது புறம்போக்கு இடம். வா.சா.ஆ 2 ஆவணத்தில் தபசில் சொத்தின் அளவுகள் என்னவென்றால் தென்வடல் மேல்தலை 73–1/4, தென்வடல் கீழ்தலை 75–1/4, கிழமேல் வடபுறம், தென்புறம் 22 அடிகள் மொத்த பரப்பளவு 3–3/4 செண்டு 1633.50 சதுரஅடியாகும். நான்கு மால்கள் என்ன காட்டப்பட்டுள்ளது என்றால் மேல்புறம் சிவனு செட்டியார் மனை வீடு பொது சுவருக்கு கிழக்கு, கீழ்புறம் மாடசாமி பிள்ளை பொது சுவருக்கு மேற்கு, வடபுறம் – கிழமேல் சர்ச் தெருவிற்கு தெற்கு, தென்புறம் ராதாகிருஷ்ணன் மனைக்கு வடக்கு என்று குறிப்பிடப்பட்டுள்ளது. முந்தைய ஆவணத்தின் உள்ள அளவு தான் வா.சா.ஆ 2 லும் உள்ளது. நான் சொத்தை அளந்து பார்த்து வாங்கினேனா

என்றால் இல்லை. வாதி வீடு கட்டுவதற்கு ஆட்சேபனை செய்து மனுக்கள் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அதில் இரண்டு தரப்பினர்களுக்கும் விசாரணை முடித்து உத்தரவு வழங்கப்பட்டது அதை எதிர்த்து உயர்நீதிமன்றம் சென்றேன் என்றால் எந்த உத்தரவும் வழங்கப்படவில்லை. பி.வா.சா.ஆ 30 ல் அனுமதி ஏற்கனவே இருக்ககூடிய கட்டிடத்தை காட்டி பெறவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 30 ல் நான் கட்டக்கூடிய இடத்திற்கு கீழ்புறம், தென்புறம் காலியிடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 30 ல் தரைதளத்தில் ஜன்னலோ, கதவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. குறிப்பிடப்பட்டுள்ளது. நான் சொல்வது சரியல்ல தரைதளத்தில், ஜன்னலோ, கதவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அது விடுபட்டுள்ளது. விடுபட்டுள்ளது என்பதற்காக பி.வா.சா.ஆ 30 க்கு சீர்திருத்த கட்டிட அனுமதி பெற்றேனா என்றால் இல்லை. சாட்சி பின்னிட்டு சரியாக நினைவு இல்லை என சாட்சியமளிக்கிறார். நான் படித்தவர் அனைத்து ஆவணங்களையும் பராமரிக்ககூடியவர் என்றால் சரிதான். சீர்திருத்த கட்டிட அனுமதியை நான் இந்த வழக்கு நிலுவையில் தாக்கல் செய்ய இயலும் என்றால் சரிதான். இருந்தால் தாக்கல் செய்கிறேன். பி.வா.சா.ஆ 30 ஐ நான் முழுமையாக படித்து பார்த்து விபரம் தெரிந்து கொண்டேனா என்றால் சரியாக படித்து பார்க்கவில்லை. பி.வா.சா.ஆ 30 ல் clause 3 ல் உள்ள நிபந்தனையை பின்பற்றாமல் நான் கட்டிடம் கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. தரைதளத்தில் கதவு, ஜன்னல் காட்டாமல் முதல் தளத்தில் கட்டியிருக்கும் கட்டிடத்திற்கு கதவு, ஜன்னல் காட்டியிருப்பது முறையானது அல்ல என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 30 ல் முதல் தளத்திற்கு மட்டும் தான் அனுமதி பெறப்பட்டுள்ளது. தரைதளத்தில் தென்பக்கம் கட்டிடம் கதவு, ஜன்னலுடன் உள்ளது என்பதற்கான ஆதாரம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் முறையான ஆவணம் மற்றும் கட்டிட அனுமதி

இல்லாமல் கட்டிடத்தை கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றும், என்னால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல. நான் என் விருப்பம் போல் என் கட்டிடத்தை கட்டி கொண்டு வாதி அவரது கட்டிடத்தை கட்டுவதற்கு ஆட்சேபனை தெரிவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. தரைதளத்தில் 46 சதுரமீட்டர் என்று இருப்பதை 76 சதுரமீட்டர் என்று கூடுதலாக காட்டியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் விடுபட்டுள்ளது. எனது கிரைய பத்திரம் வா.சா.ஆ 2 ஆவணத்தில் சரியாக 46 சதுரமீட்டர் என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது. தவறை இதுநாள்வரை சீர்திருத்தம் செய்யாமல் நான் அதிகமாக கட்டியிருப்பது ஆக்கிரமிப்பு அதை அப்புறப்படுத்த வேண்டும் என்றால் சரியல்ல.

மவி – இல்லை

(Sd)K.சுதா ராணி,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.